ராம. சொ. திருநாவுக்கரசு செட்டியார்
27-12-41
136

உ

சிவமயம்

கோவூர் திருமேனீச்சரம்

ம. பாலசுப்பிரமணிய முதலியார்

கோவூர் ஸ்ரீ சுந்தரேசுவரர் தேவஸ்தான வெளியீடு

1940

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

79/4

உ

சிவமயம்

கோவூர் திருமேனீச்சரம்

" தேனைக்குங் கிளிமழலை உமைகேள்வன் செழும்பவளம்
தானைக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானைக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே "

கோவூர் என்பது செங்கற்பட்டு ஜில்லா ஸ்ரீபெரும்பூதூர் தாலுகாவில் செம்பரம்பாக்கம் ஏரிநீர்ப் பாசனமுடையதொரு செழிப்பான ஊர். சேக்கிழார் சுவாமிகள் திரு அவதாரத் தலமாகிய குன்றத்தூருக்கு வடக்கில் இரண்டு மைல் தொலைவில் இவ்வூர் இருக்கிறது. மிக அருகிலுள்ள இரண்டு முக்கியமான ஊர்களின் பெயரைச் சேர்த்து ஒரு தொடர்மொழியாக வழங்குவது நமது நாட்டில் பழைய காலத்திலிருந்து வருகிற ஒரு பழக்கம். சிதம்பரம் சீகாழி, ஸ்ரீரங்கம் ஜம்புகேசுவரம் என்ற தொடர்மொழிகளைப் போலவே கோவூர் குன்றத்தூர் என்ற தொடர்மொழியும் வழங்குவதிலிருந்து இவ்விரண்டு தலங்களும் ஒத்த பெருமையுடையன என்பது எளிதில் அறியப்படும்.

கோவூர் என்பதற்கு அரசனுடைய ஊர் என்று பொருள். கோ என்ற சொல் அரசனைக் குறிப்பதாக ஆயிரக்கணக்கான சிலாசாசனங்களிலும், கோப்பெருஞ்சோழன் கோச்செங்கணன் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்று தமிழிலக்கியத்துட் காணும் பெயர்களிலும் வழங்கப்படுகிறது. இதிலிருந்து கோவூர் அரசர்களும் அவர்கள் உற

வினரும் வசித்த இடமென் றறியலாம். கோவூருக்கடுத்துள்ள மாங்காட்டுச் சிலாசாசனங்களில் அவ்வூர் அழகிய சோழநல்லூர் என்று கூறப்படுகிறது. கீர்த்திமிக்க இராஜராஜசோழன் தந்தையாகிய சுந்தரசோழன் பெயரால் அவ்வூர் இவ்வாறழைக்கப்பட்டதென்று சரித்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். நீர்வளம் நிலவளம் குடிவளம் பொருந்திய இவ்வூர்கள், குளிர்ச்சிபொருந்திய அடர்ந்த சோலைகளினிடையே அரசகுடும்பத்தினர் மிக விருப்பத்தோடு வசிக்கும் இடங்களாக இருந்தன. "மன்றலமர் சோலை மருகு தமிழ்மணச்குந் தென்றலமர் கோவை", "சோலையெல்லாம் தேன்றுவுங் கோவை", "செந்நெல் நீள்கோவை", "சேலுகளுங் கோவை" என்று இவ்வூரின் குளிர்ச்சியும் வளமும் அழகாகத் "தினகர வேண்பா" என்ற நூலுள் போற்றப்பட்டுள்ளன. இந்நூலுள் "கொங்கேறு தண்களபக் குன்றை அச்சுதேந்திரன் தன்செங்கோல் செலுத்தும் தினகரா", "இருந்திடத்தே சீமைபெற்றுய் கோவைத் தினகரா", "திண்பார் புரக்குந் தினகரா" என்று காணப்படும் குறிப்புக்களிலிருந்து தினகரர் என்பவர் இவ்வூரிலிருந்தே செங்கோல் செலுத்தின செய்தி அறியப்படும்.

இத்தகைய பெருமை வாய்ந்த கோவூரில் இதயத்தானமாக விளங்கும் அழகிய இடத்தில் திருமேனீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் இருநூறு வருஷங்களுக்குட்பட்ட காலத்திலேதான் புதியதாக நிர்மாணம் செய்யப்பட்டதென்று பல ஆண்டுகளாகப் பலரால் எண்ணப்பட்டு வந்தது. ஆனல் சில மாதங்கட்குமுன் கண்டுபிடிக்கப்பட்ட சிலாசாசனங்களால் இவ்வாலயம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றி விளங்கியதென்று உறுதியாய்க் கூறலாம்.

இவ்வாலயத்து மடைப்பள்ளியின் வாயிற்படியிலிருந்த ஒரு கருங்கல்லில் எழுத்துக்கள் காணப்பட்டன. இதைத் தகர்த்து, அரசாங்கத்துச் சிலாசாசன இலாகா அதிகாரிகளைக் கொண்டும் சென்னைப் பல்கலைக்கழகத்து ஆசிரியர்களைக்கொண்டும் பரிசோதித்ததில் ஆயிரம் வருஷத்துக்கு முந்திய சிலாசாசனம் இதிலிருப்பதாக ஏற்பட்டது. முதல் ராஜராஜ சோழன் தந்தையாகிய சுந்தர சோழனுடைய ஒன்பதாவது ஆட்சியாண்டில் (965 கி. பி) புலியூர் கோட்டத்து மாங்காடு நாட்டுக்கோவூர் திருமேனீசுவர தேவர்க்கு ஸ்ரீ பலிக்காக மன்றாடி (=இடையர்) குலத்தைச் சேர்ந்த ஒருவர் நிலம் தானம் செய்த விவரம் இக்கல்வெட்டிலிருப்பதாகவும், மடைப்பள்ளியின் படியாகிய இக்கல் ஆதியில் அர்த்த மண்டபத்துள் ஒரு சிறு தூணாக இருந்ததாகவும் மேற்கூறிய அதிகாரிகள் அன்போடு தெரிவித்தார்கள். இப்போது சென்னை மியூசியத்திலுள்ள ஒரு கல்லில் இராஜராஜ சோழன் இருபத்து மூன்றாவது ஆட்சியாண்டில் (கி. பி. 1008) இக்கோயிலுக்கு ஒரு கிரமவித்தர் (பிராமணர்) ஒருநந்தா விளக்குக்காக ஒரு ஆட்டு மந்தையைத் தானமாகக் கொடுத்த சாசனம் காணப்படுகிறது. அக்காலத்தில் கோயில்களில் திருவிளக்கு வைப்பதற்காகக் கோயில் அதிகாரிகளிடம் ஆடுமாடுகளைத் தானமாகக்கொடுக்கும் பழக்கம் மிகுதியாயிருந்ததென்று ஆயிரக்கணக்கான சிலாசாசனங்களின் மூலம் அறியலாம். இவ்வாலயத்தின் கருப்பக்கிரகத்துத் தென்சுவரில் தக்ஷிணாமூர்த்திகளின் திருவுருவத்தின் கீழ் ஒரு சாசனம் காணப்படுகிறது. இது காஞ்சிபுரத்து வணிகர் ஒருவர் கோயில் பூசகரிடம் பணங்கொடுத்துத் திருவிளக்கேற்ற ஏற்பாடு செய்ததைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டில் திதிவார நக்ஷத்திர விவரங்கள் கொடுக்கப்பட்டதிலிருந்து இதன் காலம் கி. பி. 1253ஞு ஜனவரிமீ 20உ

திங்கட்கிழமையென்று உறுதியாக ஏற்படுகிறது. இக்கோயிலின் பெயர் இராஜராஜேசுவரம் என்று வழங்கியதாக இக்கல்வெட்டிலிருந்து ஊகிக்கலாம்.

மேற்கூறிய கல்வெட்டுக்களிலிருந்து கோவூர் திருமேனி ஈசுவரர் ஆலயம் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலேயே விளங்கியதென்றும், பிராமணர் வணிகர் இடையர் முதலிய பல வருணத்தினரும் திருவிளக்கேற்றல் ஸ்ரீபலி முதலிய கட்டளைகளை ஏற்படுத்தி அவை சாசுவதமாக நடைபெறுவதற்காக நிலமும் பொருளும் தானஞ் செய்தார்களென்றும் தெளிவாக அறியப்படுகின்றன. ஆயிரம் வருஷத்துக்கு முன்புதான் சோழர்கள் பல்லவமன்னர்களைவென்று தொண்டை நாட்டைக்கைப்பற்றி ஆங்காங்கு சிவாலயங்களைக் கட்டினார்கள். அக்காலத்திய சிவாலயங்கள் கஜப்ருஷ்ட வடிவில் (தூங்கானைமாடமாகிய வடிவில்) கட்டப்பட்டன. இதைச் சோழகட்டிடம் எனக்கூறுவது இந்நாட்டு வழக்கம்.

திருவொற்றியூர், திருமுல்லைவாயில், திருவலிதாயம் முதலிய தலங்களிலுள்ள திருக்கோயில்கள் இவ்வடிவிலமைந்துள்ளன. கோவூர் சிவாலயமும் இவ்வடிவிலேயே இருப்பது, சிலாசாசனங்களால் அறியப்படும் இக்கோயிலின் பழமையை நிலைநாட்டுவதற்குரிய அரிய சான்றாகும். இக்கோயிலுக்கு இன்றைக்கும் சொந்தமாகவுள்ள நிலபுலங்களின் பெயர்களுள் திருவிடையாட்டம், பட்டவிருத்தி, கோட்டமானியம், பணிக்கன்புலம் என்பனவுள்ளன. இப்பெயர்கள் இத்தமிழ் நாட்டிலுள்ள வேறுபல ஆலயத்துச் சாசனங்களிற் காணப்படுவதாலும் இக்கோயிலின் பழமை உறுதி பெறுகின்றது.

இக்கோயிலின் சுவாமி பெயர் திருமேனி ஈசுவரர் என்பது. இப்பெயர் இவ்வாறே மேற்கூறிய பழைய சாசனத்

துள் காணப்படுகிறது. இன்றும் இப்பெயர் வழக்கத்திலிருக்கிறது. இனும் கணக்கு, தாலுகா கணக்கு முதலியவற்றிலும் இப்பெயர் காணப்படுகிறது. முற்காலத்தில் முதல் ராஜ ராஜ சோழன் மிகுந்த பிரசித்தியோடு அரசாட்சி புரிந்ததை நினைவிலிருத்துவதற்காக அவன் வமிசத்தினர் அவன் பெயரை ஊர்கட்கும் நாடுகட்கும் கோயில்கட்கும் வைத்தழைத்தனர். இதையொட்டியே கோவூர் சிவாலயமும் இராஜ ராஜேசுவரம் என்று பெயர் சூட்டப் பெற்றது. மேற்கூறிய 1253ம் வருஷத்திய சாசனத்துள் இப்பெயர் காணப்படுகிறது. சோழர் அரசாட்சி முடிவெய்திய பின் இப்பெயர் மறைந்து விட்டது. தற்காலத்தில் இப்பெயர் வழக்கத்தில்லை. சில நூற்றுண்டுகளாகப் பெயர்களையெல்லாம் வடமொழியில் வைத்துக்கொள்வது கௌரவம் என்ற எண்ணம் இத்தமிழ் நாட்டிலிருந்தது. இதை யனுசரித்துத் திருமேனி ஈசுவரர் என்ற பழைய பெயர் சுந்தரேசுவரர் என்று மாறி விட்டது. பழைய சாசனங்களில் இப்புதிய பெயர் காணப்படவில்லை.

தினகரர் என்பார் ஒருவர் கோவூரில் கி. பி. பதினும் நூற்றுண்டின் பிற்பகுதியில் வசித்து வந்தார். திருக்குறள் அதிகாரம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பாட்டைக் கடைசி இரண்டடிகளாகவும் தினகரருடைய பக்தி, கல்வி, ஒழுக்கம், கொடைத்திறன், அமைச்சின் பெருமை முதலியவற்றை முதலிரண்டடிகளிலும் அமைத்த "தினகரவெண்பா" என்ற நூல் பல ஏட்டுப் பிரதிகளின் துணைகொண்டு பரிசோதிக்கப்பட்டு, சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் ராவ்சாஹெப் - திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டுளது. இந்நூலிலிருந்து தினகரர்என்பவர் கோவூரில் மிகச்சிறப்பாக வாழ்ந்து இக்கோயிலுக்குச் செய்த உதவி விவரங்கள் கிடைக்கின்றன.

இவருடைய தந்தையின் பெயர் வீரயன் என்பது. இவர் சிறந்த சிவபக்தரென்பது "சிவன் சீர்பாதம் போற்றும் தினகரா," "தில்லை நடம் போற்றும் தினகரா," "தற்பரனை யாறு சமயத்தையுங் கடந்த சிற்பரனைப் போற்றுந் தினகரா," "வேலாசிவயோகி....தருமசிலா" என்ற குறிப்புக் களாலறியப்படும்; கல்வியறிவொழுக்க முடைய சான்றோ ரென்பது "கல்விக் கடல் கடந்து கற்றறிவு பேசுமவர் செல் விக்கப் போற்றுந் தினகரா," "கற்றோர் தமிழை யெல்லாந் தெள்ளிப்புனையுந் தினகரா," "தக்க தொண்டை நன்னாடு சான்றோருடைத் தெனுஞ் சொல்திக்கறியவந்தாய் தினகரா" "ஆசகலு நின்குணத்தையன்புடன் ஐம்பத்தாறு தேசமுங் கொண்டாடுந் தினகரா" என்பவற்றாலறியக் கிடக்கும்; சிறந்த கொடையாளி யென்பது "மானிடர்க்கு ளுன்போல் வரையாத் தியாகமற்றைத் தீனரிடத்துண்டோ தினகரா," "வானுலகில் மண்ணுலகில் மற்றொன்றிற் கண்டதுண்டோ தேனுவென வீசுந்தினகரா" என்பன முதலிய பல குறிப்புக் களா லுணரப்படும். இவர் கோவூரில் வசித்து அக்காலத்திய அரசராகிய அச்சுதப்ப நாய்க்கரின் மந்திரியாகவும் சேனைத் தலைவராகவும் அதிகாரம் செலுத்தியதை இவ்வெண்பாவுட் பல பாடல்கள் கூறுகின்றன. திருமழிசைக் கல்வெட் டொன்றாலும் (22 of 1911) இச்செய்தி உறுதியாகின்றது. இவ்வரசர் காலம் கி. பி. 16-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி யென்று இந்து தேச சரித்திரம் கூறுகின்றது. கல்வி யறிவு ஒழுக்கம் கொடைவண்மை சிவபக்தி முதலியவற்றாற் புகழ்பெற்ற இவர் தாம் வசித்துவந்த கோவூரிலுள்ள சிவா லயத்துக்கும் வேண்டியவாறெல்லாம் உதவி செய்தன ரென் பதைத்

தேர்த்திருநாள் பூசைத் திருப்பணிநீ கண்டபின்னைத்
தீர்த்தமுள்ள கோவூர்த் தினகரா—பார்த்தால்

மணியிற் றிகழ்தரு நூல்போல் மடந்தை
அணியிற் றிகழ்வதொன் றுண்டு.

என்ற அழகிய பாடல் கூறுகின்றது. தேர் புதியதாகச் செய்வித்துத் திருவிழா நடத்திப் பூசைகளை ஒழுங்கு படுத்தித் திருக்கோயில் திருப்பணி செய்து, திருக்குளம் எடுத்துத் தினகரர் கோவூர் சிவாலயத்துக்குப் பல வழி களிலும் தொண்டு புரிந்தார் என்று விரிவாகப் பொருள் கூறுவதற்கு இப்பாடலின் சொல்லமைப்பு இடந்தருகின்றது. இவையனைத்தினுள் சிலவற்றையேனும் இவர் செய்தனர் என்று சந்தேகமின்றி உரைக்கலாம். கோவூரில் தேர்த் திருநாளையேற் படுத்தியவர் இவரேயென்று திடமாகச் சொல்லலாம்.

கோவூரிலிருந்த திரிபுராந்தக முதலியாரின் பிள்ளை யாகத் தோன்றி, சிவசங்கரன் என்று பெயரிடப் பெற்று, இளமையிலேயே பக்தியுடையவராகித் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளிடம் உபதேசம் பெற்று, அச்சுவாமிகளுடைய கட்டளையின்படி திருப்போரூரில் ஆலயத்திலும் திருமடத் திலும் தொண்டு செய்திருந்து, சிதம்பர சுவாமிகள் பரிபூரணதசை யெய்திய பிறகு திருமடத்தின் தலைமைப் பட்டம் தாங்கிய சிவசங்கரத் தம்பிரான் சுவாமிகளின் வரலாற்றைத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளுடைய சரித்திர புத்தகத்தில் விரிவாகக் காணலாம். சங்கீத உலகத்தில் பெருங் கீர்த்தி பெற்ற தியாகராஜ கீர்த்தனுசாரிய சுவாமிகள் திருப்பதியிலிருந்து திரும்பிவரும் பயணத்தில் கோவூருக்கு வந்து, சுவாமிமீது "சம்போ மகா தேவ", "ஈவஸுத நீவம்டி", "சுந்தரேசுவருநி", "கோரிஸேவிம்ப", "நம்மிவச்சின" என்ற கீர்த்தனங் களைப் பாடினர். இவர் புறப்படும்போது இவருடைய பல்லக் கில் கோவூர் சுந்தரமுதலியாரென்பவர் இவருக்குத் தெரி

யாதபடி ஆயிரம் வெள்ளிக்காசுகளை இவருக்குப் பரிசாக மறைத்து வைத்தனர். அருணோதய காலத்தில் பல்லக்கு புறப்பட்டுக் காட்டுவழியாய்ச் சென்றது. திருடர்கள் வழி பறிக்க முயன்றார்கள். இராமலக்ஷ்மணர்கள் ஜவான்கள் போலத்தோன்றித் திருடர்களை அணுகவொட்டாமல் தடுத்து வந்து சூரிய உதயத்தில் மறைந்தார்கள். பின்பு இதையறிந்த தியாகராஜர் திருடர்க்குத் தரிசனங்கொடுத்துத் தமக்குப் புலப்படாத இராமலக்ஷ்மணர்களை நினைந்து நினைந்து மிக வருந்திப்பிரலாபித்து "ராமராம", "எவரிச்சிரி", "வாசாம கோசர" என்ற கீர்த்தனைகளைப் பாடினார். இவ்வரலாறு இவர் கீர்த்தனைத்தொகுதி முகவுரையுட் கூறப்பட்டுள்ளது.

நூறுண்டுகட்கு முன்பு 1824-ம் வருஷம் கோவூர் முத்தையா முதலியாரின் புத்திரர்களாகிய வைத்தியநாத முதலியார், சுந்தர முதலியார், ஏகாம்பர முதலியார் ஆகிய சகோதரர்கள் தங்கள் குடும்ப சொத்துக்களைப் பாகப்பிரிவினை செய்துகொண்டு, சென்னையில் சில வீடுகள் தோட்டங்களையும் கோவூர் பணிச்சேரி பரணிப்புத்தூர் கிராமங்களில் சில நிலங்களையும் கோவூர் சிவாலயத்துக்குத் தானமாக ஒதுக்கி வைத்து, ஆலய காரியங்களை இன்னார் இன்னாருக்குப்பின் இன்னார் இன்னார் பார்ப்பது என்ற முறையை வகுத்துச் சாசனத்தின் மூலம் எழுதி முடித்தார்கள். இவர்கள் வமிசத்தில் சிலருக்குப் பிறகு கந்தசாமி முதலியார் வழக்குத்தொடுத்து அதன் முடிவில் ஆலய தருமகர்த்தராயினர். இவர் காலத்தில் வரும்படிகளெல்லாம் ஒன்றுக்கு நாலாகப்பெருகின. கோர்ட்டு உத்தரவுபெற்று மயிலாப்பூரிலிருந்த தொம்பரீசன் கொல்லையென்ற தோட்டத்தை வீடு மனைகளாகப் பிரித்துப் பகிரங்க ஏலத்தில் ஒரு லக்ஷரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு விற்றுமுதல் செய்தவரும் இவரே. இவர் காலத்துக்குப் பிறகு இவர் மனைவி கற்பகம்மாள் கோயில்

காரியங்களைப்பார்த்து வந்தார்கள். இவ்வம்மையார் பார்வை ஒழுங்காக நடைபெறவில்லையென்று கோவூர் வாசிகள் வழக்கு செய்தனர். இவ்வழக்கு விசாரிக்சப்பட்டுக் கோயில் நிர்வாகத்துக்கு ஒரு ஸ்கீம் திட்டம் உத்தரவாயிற்று. இந்த திட்டத்தின்படி இப்போது இக்கோயில் நிர்வாகம் நடை பெற்று வருகின்றது. இந்த ஸ்கீம் திட்டத்தின்படி கற்பகம் மாள், பெரிய ஐயா முதலியார், வைத்தியநாத முதலியார் என்போர் சிலகாலம் தர்மகர்த்தர்களாக இருந்தனர். இவர்களுள் முற்கூறிய இருவர் இறந்துவிட்டனர். திருவாளர்கள் - மாசிலாமணி பிள்ளை, அழகப்ப முதலியார் ஆகிய இருவரும் சென்னை இந்துமத பரிபாலன அங்கத்தினரால் சில வருடங்கட்குத் தருமகர்த்தர்களாக நியமிக்கப்பெற்று வேலைபார்த்துக் குறித்தகால முடிவில் நீங்கினர். திரு. தெய்வ சிகாமணி முதலியாரும் இவ்வாறே நியமிக்கப்பெற்றுச் சில மாதங்கள் தருமகர்த்தராக இருந்து, பின் தாமே விலகிக் கொண்டனர். இப்போது தருமகர்த்தர்களாக உள்ளவர்கள் திருவாளர்கள் பா. ரா. கோவிந்தசாமி முதலியார், ம. பால சுப்பிரமணிய முதலியார், அ. சோமசுந்தரம் செட்டியார் ஆகிய மூவர். இவர்களுள் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் மானேஜிங் தர்மகர்த்தராகப் பணிபுரிபவர். இக் கோயில் நிர்வாகம் திருப்திகரமாயிருக்கிறதென்று சில நாட்களுக்கு முன்பு கிடைத்த கடிதத்திலும் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இக்கோயிலில் சிறுகாலை, உச்சியம்போது, மாலை, நடுநிசி ஆகிய நான்குகால பூசைகள் நாடோறும் நடந்து வருகின்றன. மாதப்பிறப்பு, நிறைமதி, மறைமதி, கிருத்திகை, பிரதோஷம், வெள்ளிக்கிழமை உத்ஸவங்கள் நடக்கின்றன. வைகாசி விசாகத்தில் தீர்த்தமாகப் பத்துநாள் திருவிழாவும், பிள்ளையார் சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகைதீபம்,

சங்காபிஷேகம், ஆருத்ராதரிசனம், சிவராத்திரி முதலிய விசேஷ உத்ஸவங்களும் சிறப்பாக நடக்கின்றன. நித்தியோத்ஸவஸ்ரீபலி, நால்வர் திருநக்ஷத்திரம், நடராஜர் ஆறபிஷேகம், சூரசம்ஹாரம், வசந்தோத்ஸவம், திருவிழாவிலும் நவராத்திரி சோமவாரம் முதலிய விசேட காலங்களிலும் உபந்நியாசங்கள் முதலியவை சில ஆண்டுகட்கு முன்பு தான் தொடங்கப்பெற்று நடக்கின்றன. இக்கோயிலைச் சேர்ந்த தேவாரபாடசாலை யொன்றுண்டு. இதில் இவ்வூர் இளைஞர்கட்கு இலவசமாக நாடோறும் திருமுறை ஓதும் பயிற்சி தரப்படுகிறது. இக்கோயில் நித்திய நைமித்திகங்களெல்லாம் உபயம் செய்வோர் உதவி சிறிதுமின்றிக் கோயில் செலவிலேயே போதுமான திட்டத்தின்படி நடைபெறுகின்றன.

மேலே கூறப்பட்ட கல்வெட்டுச் சாசனங்களின் மூலம் கீழ்வருமாறுள்ளது:—

I. கர்ப்பக்ரஹத்துத் தென்சுவரில் தக்ஷிணாமூர்த்தி விக்ரஹத்தின் கீழுள்ளது :—(இதன்காலம் 20-1-1253)

சுபமஸ்து திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ விஜயகண்டகோபால தேவர்க்கு யாண்டு ௩-வது மகாஞாயிற்றுப் பூர்வபக்ஷத்துப் பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற உத்திரத்துநாள் கோவூர் இராஜராஜீசுரமுடைய நாயனுர்க்குத் திருமயிலாப்பூர் ஏலேலசிங்கனூர் உள்ளிட்டகுடி எழுபதில் இதில் கரிகால் சோழதேவர் ஸ்ரீ காஞ்சியிலே சோமதேவசேரியில் ஏற்றின குடியில் கொடிஞ்சின்றி வணிகன்காமன் பெருங்காடபடவளவர் வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்குப் பணம் ௰. இப்பணம்பத்தும் கைக்கொண்டு இந்த சந்தி விளக்கு எரிக்கக்கடவேன் இக்கோயில் காணி உடைய சிவப்ராமணன் பெருமாள்பட்டனேன் இந்தச் சந்திவிளக்கு சந்திராதித்தவல் எரிக்கக்கடவேன் பெருமாள்பட்டன் எழுத்து ஸ்வஸ்திஸ்ரீ உ.

II சென்னை மியூசியத்திலுள்ளது (காலம் 1008 கி. பி.) :—

ஸ்வஸ்திஸ்ரீ ...செல்வியுந் தனக்...கொளக்காந்தளூர்ச்சாலை... பாடியும் நுளம்ப பாடி...கொங்கும் கொல்ல...ஈழமண்டலமும் இலட்டபாடி...தண்டாற்கொண்ட...தொழுதக விளங்.....தேசு கொள்கோவிராஜகேஸரி...யாண்டு இருபத்துமூன்றாவது...மாங் காடு நாட்டுச் கோவூர்...கிரமவித்தன் இவ்வூர்த் திருமேனி... நந்தாவிளக்கொன்று......எரிப்பதற்கு வைத்த......ட்டால் வந்த செய்...தொண்ணூற்று...(கல் தேய்ந்துள்ளதால் பல எழுத்துக்கள் மறைந்தன).

III. மடைப்பள்ளிப் படியிலுள்ளது (காலம் 965 கி. பி.):—


ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜகேசரி...யாண்டு கூ...புலியூர்க்கோட்ட ...மாங்காடு நாட்டு...மன்றுடி இள...மகன்...கலியன்...கோவூர் திருமே...ரதேவர்க்கு...ரண்டு நிசதம்......யும் ஸ்ரீப...இவ்வூர்... கொண்டு...கீழ்பாற்கெல்......த்தர்கள் பூமி...மலைத்துலை...ன்று தெற்கு...யான வரம்புக்...லன்பட்டிக்குமே...தென்பாற்கெல்... தாழும்பர் சேரி...காலுக்கு வடக்......பாற்கெல்லை......லத்துக் கீழை...குண்டிலுக்கு கிழற்பாற் கெல்லை......பனைக்கு தெற்கும் இன்னான்...ல்லையுள்...ட்ட உண்ணில......வின்றி இறையி...லை கொண்டுடைய...இவ்வரம்பெ...ஸ்ரீபலி...ள்ளமையி...கு அழிவு செய்...(கல் தேய்ந்துள்ளதால் பல எழுத்துக்கள் மறைந்தன).

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே" என்று வாதவூரடிகள் வியந்து கூறும் பரமசிவம் உயிர்கள் பொருட்டு உருவங்கொண்டுள்ள ஆலயங்களுள் கோவூர் சிவாலயத்திலும் திருமேனி ஈசுவரராகப் பழையகாலந் தொட்டே ஆயிரத்துக்கு மேற்பட்ட வருஷங்களாக வீற் றிருந்து அருள்புரிகின்றார். நவநாகரிகம் தலைவீசியாடுகின்ற இக்காலத்திலும் " பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்

பெற்றியனே " என்றுங்குப் புதியராகவே அழகம்மையாகிய சௌந்திராம்பிகை சமேதராக நம்மைத் தடுத்தாட்கொள்கின்றார். இவ்வாறு பழையராகவும் புதியராகவும் அருள் புரியும் திருமேனி ஈசரைக் கோவூர்வாசிகளும் கோவூரைச் சேவிக்கவரும் அன்பர்களும் வழிபட்டு இம்மையில் எல்லா நன்மைகளேயும் மறுமையில் சிவாநந்தப் பெருவாழ்வையும் பெற்று இன்புறுவார்களாக. சுபம்.

" மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலே
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே "

திருச்சிற்றம்பலம்



மடைப்பள்ளியின் படியிற் கிடைத்த பழைய சாசனம்